மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.290/2019 வா.சா.1

2020ம் ஆண்டு மாதம் தேதியில் என்பவரின் சாட்சியாகிய வா.த.சா. ன் வாக்குமூலம் (1969ஆண்டு 44வது விதியின்படி) திரு.K.முனிராஜா, பி.எஸ்.சி., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி (பொறுப்பு), பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - ஜான்பாட்ஷா | தொழில் | - | |
| த/பெ க/பெ | - அசேன்சாய்பு | ஜாதி | - | |
| கிராமம் | - ஜமீன் புரவிபாளையம் | வயது | - | |
| தாலூக்கா | - பொள்ளாச்சி | தேதி | - | 04.01.2020 |

முதல் விசாரணை

நான் பொள்ளாச்சி வட்டம், ஜமீன் புரவிபாளையம் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

02.03.2007ம் தேதியன்று கோவை உதவி ஆணையர் நில சீர்திருத்தம் அவர்களின் உத்தரவின்படி எனது சித்தப்பா காதர்பாட்ஷா பெயரில் வழங்கப்பட்ட தாவா சொத்துக்கான நிபந்தனை அடிப்படையிலான பட்டா வா.சா.ஆ.1 ஆகும். எனது சித்தப்பா 13.06.2017ம் தேதியன்று எனது பெயரில் எழுதி கொடுத்த ஹிப்பா என்னும் தான சாசன ஊர்ஜித பத்திரம் அசல் வா.சா.ஆ.2 ஆகும்.எனது சித்தப்பா காதர் பாட்ஷாவின் இறப்பு சான்று அசல் வா.சா.ஆ.3 ஆகும். எனது பெயரிலும் எனது சித்தப்பா பெயரிலும் உள்ள குடும்ப அட்டையின் அசலோடு ஒப்பிட்ட ஒளிநகல் வா.சா.ஆ.4 ஆகும். தாவாப்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும்.

ஒப்பம்/-